செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்:- நள ஞூ வைகாசி மீ கரு - உ வெள்ளிக்கிழமை (28-5-1976) [இல: அ

திருக்கேதீச்சுர மகா கும்பாபிடேகம்

## சுக்கிர மௌட்டிகம் புறநடை விளக்கம்

### சிவஸ்ரீ சுவாமிநாதசிவாசாரியார் கலந்துகொள்வார்

திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிடேகம் 4-7-1976 திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் சுக்கிர மௌட்டிகம் இருக்கிறதே-அதுதோஷம் இல்லையா எனச் சிலர் வினவுகின்றனர். அதற்குப் பரிகாரம் செய்தால் தோஷம் நீங்கிவிடுமா எனவும் கேட்கின்றனர். அதற்குத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைச் செயலாளர் திரு. இ. நமசிவாயம் தர்மபுர ஆதீனம் வேதசிவாகமப் பாடசாலை அதிபர் சிவாகமரத்தினகரம் ஆகம வித்துவான் எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் காலப்பிரகாசிகை என்னும் நூலிலிருந்து குரு சுக்கிர மௌட்டிகம் பற்றி எழுதிய விளக்கம் தந்துள்ளனர். அது பின்வருமாறு சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் இக் கும்பாபிடேகத்திற் கலந்துகொள்ள இலங்கை வருகின்றார்.

"குரு சுக்கிரன் இருவர்களுள் ஒருவர் மௌட்டிக தோஷத்தை அடைந்திருந்து மற்றவர் உச்ச வீட்டிலோ, அல்லது தனது இராசியிலோ, அல்லது தனது மித்திரன் வீட்டிலோ இருப்பாரேயாகில் மௌட்டிக தோஷம் கிடையாது. என்ற காலப்பிரகாசிகை வாக்கியத்தின்படி கும்பாபிடேக தினத்தில் சுக்கிர மௌட்டிகம் இருப்பினும் குரு அவரது மித்திரரான செவ்வாய் வீடான மேடத்தில் இருப்பதால் மௌட்டிக தோஷம் இல்லை. மேலும், அன்றைய தினம் குரு கார்த்திகை ஒன்றில் இருப்பதால் அம்சத்தில் தனது வீட்டில் இருக்கிறார். மேலும், காலப் பிரகாசிகையில் மித்திராம்சத்தில் இருந்தாலே தோஷம் இல்லை என்று கூறி இருப்பதால் தனது அம்சத்தில் இருப்பது மிகச் சிறந்தது. மௌட்டிக தோஷம் கிடையாது. இரண்டு கிரகங்களும் அஸ்தமனம் அடைந்திருந்தாற்றான் தோஷம். ஆதலால் ஒருகிரகம் அஸ்தமனமாக இருப்பது தோஷம் இல்லை.

## 'சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்'

( வித்துவான் மு. கந்தையா B. A. )

[ முன் வளர்ச்சி — 3 ]

மேல் நிலையாகிய ஞானபாதத்தில் நிற்பவர் தாமும் தம் நிலையின் வழுவாமைப் பொருட்டாகச் சரியை கிரியைகளைப் பேணியொழுகுமாறே உபதேசிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடற்பாலனவாம் என்க. அன்றியும், மரத்தின் நுனியையடைய விரும்பு மொருவன் அடிமரஞ்சார்ந்து படிமுறையானேறி உச்சியையடைவது போலவும் இமயமலைச்சிகரஞ் சாரவிரும்பிய டென்சிங்கும் ஹிலாரியும் அடிவாரத்திலிருந்து படிமுறையானேறிப் பலநாட்கழிந்து 'எவறெஸ்ற்' சிகரத்தை எய்தியதிறம் எல்லோருமறிய நிகழ்ந்தவாறு போலவும் பந்தநிலையாகிய அடிவாரத்தில் நிற்கும் ஒரு

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்

## சேக்கிழார் விழா



அ. இ. சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வைகாசித் திங்கள் இருபதாம் நாள் புதன்கிழமை (2—6—76) நிகழும்.

காலை நிகழ்ச்சிகள் யாழ் இந்துக் கல்லூரிப பிரார்த்தனை மண்டபத்தில் 8-30 தொடக்கம் 12 மணிவரைக்கும் நிகழும்.

பூசை ஆராதனை, திருமுறையோதல், சொற்பொழிவு

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

x x x

### சைவபரிபாலன சபை மண்டபத்தில்

2-6-76 புதன்கிழமையன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் சேக்கிழார் குருபூசை கொண்டாடப்பெறும், முற்பகல் 9 மணியளவில் நாவலர் மண்டபச் சிவபூஜாமண்டபத்தில் விசேட சிவபூசையும் நடராசர் பூசையும் நிகழ்ந்தபின் சேக்கிழார் நாயனார் புராணபடனம் நிகழும்.

## சிறந்த சிவ சொத்து

" இறை — ஒளி "

தெய்வந் தெளிந்த திருத்தொண்டர் சீருரைக்கும் ஐயன், அருளாளன், ஆன்றசைவ — மெய்மைத் திறந்தரும் சேக்கிழாரின் செந்தமிழ்ச் செல்வம் சிறந்த சிவசொத்தாம். தேடு.

## ஸ்ரீ ஐயன் நீராவி வீரகத்தி விநாயகர்

### அலங்காரத் திருவிழா நிகழ்ச்சி அமைப்பு

ஆலயங்கள் புனிதமான இடங்கள். ஆசாரங்கள் பேணப்பட வேண்டும். சமய நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும். திருமுறைகள் மற்றும் சமயக் கிரியைகள் போற்றப்பட வேண்டும். இதற்கு இளைஞர்கள் பங்கு சிறப்பானது இங்கு நீராவிப் பிள்ளையார் கோவிலில் இவ்வித சிறப்புகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. என பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இரண்டாம் திருவிழா நிகழ்ச்சியிற் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றும்போது குறிப்பிட்டார்கள். மேலும் வீண் ஆடம்பரங்களும் கேளிக்கைகளும் இல்லாது பக்திச் சூழலில் உரியநேரத்திலேதிருவிழாக்கள் நடைபெறுவது உகந்தது என்றும் மன அமைதியுடன் வழிபடும் இடமே தேவை என்றும், திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசை நிகழ்ச்சிகள், சிவசிந்தனை என்பன எம்மை ஈடேற்ற உதவுவன என்றும் கூறினார்கள்.

நீராவி ஸ்ரீ ஐயன் வீரகத்தி விநாயகர் ஆலயத்திற் சென்ற வெள்ளிக்கிழமை மணவாளக் கோலத் திருவிழாவுடன் பத்து நாட்கள் அலங்காரத் திருவிழாக்கள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தினமும் மத்தியான வேளைகளில் ஒன்பது கும்பம் வைத்து ஸ்நபனபிஷேகமும் இரவு உருத்திர கும்பத்துடன் அலங்காரத் திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

தினமும் திருமுறை மன்றத்தினரால் திருமுறைப் பாராயணம் திருமுறைப் பஜனை, சமயச் சொற்பொழிவுகள் என்பன கிரமமாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன.

### புராதன காலக் கோயில்

தில்லையம்பதிக்கு தென்பகுதியின் அருகாமையிலுள்ள, திருமயிலாடியில் புராதனகால சிவாலயத்தின் கீழ்ப்பகுதியில் சிய்யானம் கிராமத்தில் மக்கள் எவரும் கவனியாமல் மறைந்திருந்த புராதன கால பெருமாள் கோவிலை அண்மையில் சிறந்த இராமபக்தரான தவத்திரு. ஹரிதாஸ் சுவாமிகள் [வயது 80க்கு மேலுள்ளவர் சாக்கை (கோணியை) உடையாக அணிந்துள்ளவர்] அண்மையில் ஸ்ரீ வெங்கடாஜலபதியின் திருவருளால் கண்டுபிடித்து 'தென் திருப்பதி" என்றும், பெருமாளுக்கு ஸ்ரீ. வெங்கடாஜலபதி என்றும் திருநாமங்கள் சூட்டியுள்ளார்.

## நினைவு விழா

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய சைவ சேவா சங்கத்தின் ஆதரவில் சேர். பொன். இராமநாதன் நினைவு விழா 1. 6. 76 செவ்வாய்க்கிழமை மு ப. 11-30 மணியளவில் கலாநிதி ஆ சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நிகழும்; ஜனாப் S. H. M. யாசீன் கல்வி அதிகாரி சிறப்புரை வழங்குவார்.

அரசப் பேரவையிலே

## 'அப்படியே இருக்கும்' நிலையா?

தொகுதி நிர்ணய ஆணைக்குழு தங்கள் முடிபுகளை வெளியிட்டிருக்கின்றனர். பதினேழு உறுப்பினர்கள் கூடுதலாக அடுத்த தேர்தலின்பின் தேசிய அரசுப் பேரவையில் இருப்பார்கள். ஆனால் இவர்களுள் எத்தனை பேர் தமிழ் உறுப்பினர்களாவார்? இக் கேள்வியைத் திருவாளர் பொதுசனம் கேட்கின்றார். பதிலும் அவரே கொடுக்கின்றார். "இருந்தபடி இருங்கள்" என்றபடியுமல்லாமல் எண் முறையில் இருந்த விகிதம் குறைந்துவிடுமோ என்று கருதுகின்றார். இருந்து பார்ப்போம்.

வண்டிச் சாரதிகள் முன்

## நமன் தூதுவரா?

வாடகை மோட்டார் வண்டிச் சாரதி ஒருவர் சிறிதுநேர ஓட்டத்தின் பின் துப்பாக்கி முனையில் கை கால் பிணைக்கப்பட்டு வாகனப் பின் பெட்டியில் தள்ளப்படும் செப்படி வித்தை இப்பொழுது சர்வ சாதாரணமாகிறது போலும்.

மூச்சடக்கிய மோட்டார்ச் சாரதி நமன் கையிலிருந்து தப்புவது விந்தையே.

இந்த யம தூதுவர்கள் நாட்டுப் பாடிகாவலருக்கும் அப்பாற்பட்ட ஆற்றல் படைத்திருக்கின்றார்கள். இனிச் சாரதிகள் உயிரைக் கையிலேந்திய வண்ணம் ஓடப் பழக வேண்டி வருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ வைகாசிமீ கரு-உ வெள்ளி

## திருத்தொண்டர் சீருரைத்த சேக்கிழார் சுவாமிகள்

மணிவாசகப் பெருந்தகையின் அமுதனைய அருள் மொழிகள் யாவும் ஆழ்ந்த கருத்தை அறிவுறுத்து வன. அவ்வாறே மூவர் தமிழின் முதன்மையும் என்க. வாசகமணியில் ஒன்று:

"கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்
தங்கருத்தின் னோக்கரிய நோக்கே"

என்பது.

கூர்த்த மெய்ஞ் ஞானங் கொண் டுணர்ந்தவர்கள் திருத் தொண்டர்கள் அந் நாயன்மார்கள் தங் கருத்தின் நோக்கரிய நோக்காய் நுணுக்கரிய நுண்ணு ணர்வாய் இலங்குபவன் இறைவன்.

இந்த மெய்ஞ்ஞான வித்தகர்களின் உள்ளங்களை உரியவாறுணர்ந்து உலகுக்கோர் ஒப்பரிய சைவ சித்தாந்த விளக்கமாக விருந்த விருந்தளித்த சேக்கிழார் சுவாமிகளைச் சைவ சமயிகள் போற்றிய வண்ணமிருக்கின்றனர். என்னே? தேவாரத் திருவமு தினை அருந்தும்பொழுதெல்லாம் எழுஞ் சுவையின் தொடர்பைத் திருத்தொண்டர் புராணத்தில் அநுப விப்பதினால் என்க.

திருத் தொண்டர்கள் எம்பெருமானின் உருவ நிறைவை உள்ளும் புறம்பும் கண்டுணர்ந்தவர்கள்; அவ் வுத்தமர்கள் திருவாய் மலர்ந்தவற்றை எழுத் தெண்ணி, அசை யெண்ணிச் சீரெண்ணி அடி யெண்ணி ஆய்ந்து ஆரா இன்ப அநுபவ எழுச்சி யினாலே தொண்டர் புராணம் தொடுத்த சேக்கிழார் சுவாமிகள் எத்துணை மெய்ஞ்ஞான உணர்ச்சி விளங் கியவர் என்று சொல்லவும் வேண்டுங்கொல்!

அறுபத்துமூன்று நாயன்மார்களை ஆண்டுதோ றும் வெவ்வேறு காலங்களில் அருச்சிகளும் அடி யார்கள் சேக்கிழார் பெருமானைச் சிந்தை செய்யும் நாளிலே திருத்தொண்டர்களையும் பரவுகின்ற பெருமை யடைகின்றனர். எனவே அறுபத்துமூன்று அங்க மாயமையும் சேக்கிழார் குருபூசை, இப் பெருநாள் சைவ மக்களுக்கு இன்றியமையாத திருநாளாகும்.

சேக்கிழார் மன்ற நோக்கம் திருவமையப் பெற்றது. அறிவாக்கம் தருவது. சைவ சாதனைக்கு மெய்வழி வகுப்பது. இத்தகைய தொண்டு உத்தம மானதென்று உரைக்கவும் வேண்டுமோ?

---

### அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சு )

வித்துவான் சி. ஆறுமுகம் ஆசிரியர் யா. இ. க. புராணபடனம் 'அப்பரும் - அப்பூதியடிகளும்' புலவர்மணி த. குமாரசுவாமிப் பிள்ளையும் குழுவும். நண் பகல் பூசை, ஆராதனை,

மாலை 5 - மணிக்கு சேக்கிழார் திருவுருவப்படம் வண்ணை வைத்தீசுவரன் கோயிலிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு மானிப்பாய வீதி, காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம இந் துக்கல்லூரித் திறந்தவெளியரங்கினை அடைதல்.

மாலை 6 மணிக்கு திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையில் விழா நிகழும். திருமுறையோதல், வரவேற்புரை பண்டித வித் துவான் க கி. நடராஜன். அடுத்து தலைமையுரை. திருவாட்டி மனோன்மணி முத்துத்தமபி தலைமையில் பட்டி மன்றம் சொற பொழிவு 'தூண்டு தவ விளக்கனையர்' சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை, சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, நன்றி யுரை திரு. க, சொக்கலிங்கம்.

---

## சிந்தனையைத் திருந்த வைத்துச்

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

யிர் படிமுறையான் மட்டுமே முத்திமுடிவாகிய சாயுச் சியத்தை யடைதல் முடியும் என்பது யாம் ஆவசிய கங்குறிக்கொளற் பாலதாம். இப்படிமுறை முன்னேற் றமும் தனியொருபிறப்பிலே தோன்றி அதிலேயே முடி பெய்துமாறின்றிப் பரம்பரையான் வரும் பல்வேறு பிறப்புக்களில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் பான்மையதென்பது ஈண்டேகுறிக்கொளற் கமையும். 'புறச்சமய நெறிநின்றும்' என்ற சித்தியார்ச் செய் யுளை நோக்குக.

நமது பாரம்பரிய அநுபவப் பின்னணியோடு விளங்கும் ஆஸ்திக சைவ உண்மை இதுவாகவும் சைவரென்றிருக்கும் நாமே இவ்வுண்மையைப் பிறழ்த்திவிட முயலும் முயற்சியின் நிலைமை, தாம் நிற்குங் கொப்பை ஒருவர்தாமே கோடரிகொண்டு தறிக்கும் நிலைமைக்கே ஒப்பா மென்பதுங் காண்க.

இனி இதற்கியைபுடைய மற்றோர் அம்சத்தினை யும் ஈண்டே வரையறுத்துணர்ந்து மேற்செல்லுதல் உசிதமாகும். இறைவன் அநாதி, சைவமும் அநாதி. ஆதலின் இறைவனைப்படைத்தார் எவருமிலராதல் போல, சைவத்தையும் படைத்தாரெவருமிலர் என்ற எண்ணத்துட் சிலர் தடக்கிக் கொண்டிருக்கக் காணப் படுகின்றனர். அது தவறாகும். அநாதியான இறை வனாற் படைக்கப்பட்டதாதலின் சைவமும் அநாதி யானதன்றி அது தன்னைப் படைத்தோனை யில்லாத தொன்றன்று. சைவம் அநாதியெனப்படுவதேயன்றி அநாதை எனப்படுமாறின்றாம். அதாவது தனக் கோர் தலைவனையில்லாததன்றாம். அது அநாதை யன்று சநாதை என்றே கோடும்.

சைவம் அநாதை அதன் விஷயத்திலே தட்டிக் கேட்க ஆளில்லை என்ற கருத்தானன்றே நம்பூருவ பக்கத்தார் சாஸ்திர விதிநோக்காது அதனைத் தம் மனப்போக்கில் வந்தபடியெல்லாம் விமர்சிக்கவும், அதன் உயிரூட்டமான ஒழுகலாறுகளைப் பிறழ்த்திக் காட்டவும், அதன் உண்மையியல்புகளைச் சந்தர்ப்பத் திற் கேற்றவாறு திரித்துரைக்கவும், முன்பின் இயைபு நோக்காது வெற்றெனத் தொடுத்தலாய் விபரீத முடிவு கள் காட்டவும் முனைகின்றனர். அம்மட்டிலன்றி, இவற்றிற்கெல்லாம் விட்டுக் கொடுக்கும் இயல்பு சைவத்திற்கு மட்டுமேயுள்ள தனிப்பெருஞ் சிறப்பாகும் எனத் தம்பட்டமடித்துக்கொள்ளவும் முனைகின்றனர். இப்படித் தம்பட்டமடித்தலொன்றே தாமிழைக்குந் தவறுகட்கெல்லாம் சர்வப் பிராயச்சித்தமாயமையும் என இன்னோர் கருதுவரேல் அதன்பலன் ஏமாற் றமே யாதல் ஒருதலை. அதிகம் பேசுவானேன்!

'அருளினுலுரைத்த நூலின் வழிவாராததன்மஞ் செய்யின் இருளுலாம் நிரயத் துன்பத் திட்டிரும் பாவந்தீர்ப்பன்' என்ற சித்தியார் வாசகமொன்றே இதனை இனிது விளக்கா நிற்கும்.

இனி, சாதனமின்றிச் சாத்திய மில்லை என்ற நியதிசைவத்துக்கும்பொருத்தமானதொன்றே. அதன் முதற் பாதமாகிய சரியை வழி ஒழுகுவோன் மட்டுமே தன்சிறுமையையும சிவபரம்பொருளின் பெருமையை யும் ஓரோ வழி உணர்வான். உணர்ந்து கொண்ட ஒரு வனே சிவனையடைய விரும்புவான் அவ்விருப்பிலேதினை ப்பவன்மட்டுமே மேற்பாதங்களாகிய கிரியை யாதிகளை நாடி அவற்றில் ஈடுபடுவான். அவற்றிற் பெறும் அநு பவ முதிர்ச்சி மட்டுமே அவனை ஞானநிலைக்கு இட் டுச் செல்லும். அந்த ஞானமே தனமுதிர்வில் ஈசன் பால் அன்பாய்ப் பரிணமிக்கும். ஞானத்தின் முடிந்த நிலை அதுவேயாதல் 'ஞான மீசன்பாலன்பே' என்றத னால் இனிது விளங்கும். அந்த அன்பே அயரா அன் பாய் உரம்பெற்று இறைவன் திருவடிச்சார்பினை விளைக்கும், முன்குறிப்பிட்டவாறு அங்கியமிலாமை யின் அரன்கழல் செலவிழைந்த உயிர் (8 ஆம் சூத்) மேல் அயரா அன்பின் அரன்கழல் சென்றடைந்து (11 ஆம் சூத்) செய்தி இதுவேயாம. இதுவே சைவ சித்தாந்த சாரசங்கிரகமுமெனலாம். இங்ஙனமாகலின் திடுதிப்பென ஒருவற்கு ஞானந் தோன்றுமெனவும் அப்பொழுதான் அவன் சைவனுகிறான் எனவும் துணி தல் அநுபவ விரோதமாகின்றது. அன்றியும் மலை அடிவாரத்திற் கால் வைக்காமலே ஒருவன் ஒரே தாவலில் அதன் சிகரத்தில் நின்றான் எனபதுபோல் வதோர் வெறும் புளுகெனக் கருதப்படவும் வழி செய்கின்றதன்றோ.

இருந்தும், பெரியபுராணச் செய்திகள் நம்பூருவ பக்கத்தார்க்குப் புரியாத பிரசினைகளாயிருப்பதாகத் தெரியவருகின்றது. மேலெழுந்த வாரியாக அவற் றைத் தொட்டுக்காட்டுமளவில் சைவத்திற்கு, மேற் காட்டியவாறான ஒழுங்குமுறையும் கட்டுப்பாடுகளும் அநாவசியமானவை என நிலைநாட்ட முனைகின்றது அவர் அறிவு.

[illegible] விதிமுறை பிறழாமல் [illegible] அவனைக் கனவிலன்றி

(வளர்ச்சி 8-ஆம் பக்கம்)

---

## சேக்கிழார் விழாவும் வருடாந்தக்கூட்டமும்

குருநாகல் சைவ மகாசபை யின் நாற்பத்தாறுவதுவருடாந் தப் பொதுக் கூட்டம் 2-6-76 புதனன்று நடைபெறும். அன் றைய தினம் சேக்கிழார் விழா வும்கொண்டாடப்பெறும். ஆசி ரியர் எஸ். கணேசலிங்கனின் சிறப்புரையும் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளையும் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

---

குருநாகல் சைவ மகாசபையின்

## 46வது ஆண்டு அறிக்கையிலிருந்து சில அம்சங்கள்

—0—

பிரதி வெள்ளிதோறும் நட ராசப் பெருமானுக்கு அர்ச் சனையும் கூட்டு வழிபாடும் நடைபெற்று வருகிறது: இவ் வாண்டு இந்து தமிழ் மகா வித்தியாலயத்திற்கு நியமனம் பெற்ற சங்கீத பூஷணம் பொன்னுலை சு கணபதிப் பிள்ளை ஆசிரியரின் உதவி யுடன் கூட்டுப் பிரார்த்தனை அண்மைக் காலத்தில் புதுப் பொலிவுடன் நடைபெறுகிறது.

நால்வர், சேக்கிழார் குரு பூசைகளும், விபுலானந்த அடி கள், நாவலர் பெருமான், சுப் பிரமணிய பாரதியார் தினங்க ளும் சிறப்புச் சொற்பொழிவு களுடன் விமரிசையாக நடை பெற்றன, நவராத்திரி விழா வும் சிவராத்திரி விழாவும் மிக சிறப்பாய் நிகழ்ந்தன.

---

## தில்லையம்பதியிலே திருப்பணிவேலை

தில்லை ஸ்ரீ சிவகாமி அம்மை மகளிர் வாரவழிபாட்டுச் சபை மகளிர்கள் கூடி, ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயிலின கீழ நுழை வாயிலின் முகப்பிலுள்ள "நட வான பத்தியில்" 80 அடி நீளம், 40 அடி அகலம் கீழ்மேலான பகுதியில் பசைமண் கூழாங்கற் கலவையால் நூதன மண்டபம் அமைப்பதற்கு முடிவு செய்து, ரூபாய் 68 ஆயிரத்திற்கு மதிப் பிட்டு இதுவரையில் சுமார் 15 ஆயிரம் ரூபாய் நிதியும் சேர்த்து விட்டனர்.

ரூபாய் 1001/-ம் அதற்கு மேலும் நன்கொடை அளிப்ப வர்களின் பெயர்களை கல்வெட் டில் பொறிப்பதென்றும் முடிவு செய்து, 11 உறுப்பினர்கள் தலா ரூபாய் 1001/- (ஆயிரத் தொன்று) வீதம் நன்கொடை யும் கொடுத்துள்ளார்கள்.

---

## புதுமுறை வழிபாடு

தில்லையம்பதியில் ஸ்ரீ நடரா ஜப் பெருமான் சந்நிதியில் கொடிமரத்திற்கு எதிரிலும், ஸ்ரீ லெக்ஷ்மி அம்மன் சந்நிதி யின் முன்பும், தில்லையிலுள்ள பாலையர் மடத்துத் தெரு விலிருந்து சுமார் 60 வயதிற்கு மேற்பட்டுள்ள திருமதி ஞானம்பாள் அம்மையார் சைவபுராண வரலாறுகளையும் வால்மீகிஇராமாயணவரலாறு களையும் வெள்ளை சுண்ணும்புக் கட்டியால் தெளிவாக ஓவியங் களையும், பொன்மொழிகளையும் தினசரி மாலையில எழுதி வைத்து ஆலய வழிபாட்டைச் செய்து வருகின்றார்கள்.

இரு சந்நிதிகளிலும் அம்மை யார் எழுதி வைத்துள்ள வர லாற்று ஓவியங்களையும், பொன்மொழிகளையும் ஆலய வழிபாட்டுக்கு வருகின்ற ஆண் பெண்கள் ஆங்காங்கும் நின்று வாசித்துக்கொண்டு வருகின் றார்கள். அம்மையாரின் புதிய முறையில் இம்மாதிரி வழிபாடு செய்து வருகின்றதை பக்தி யோடு மக்கள் பாராட்டி வரு கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையைத் திருந்த வைத்துச்

(2-ஆம் பக்க வளர்ச்சி)

நனவிற்காண முடியாத சிவகோசரியாரையும், அவர் எதிரேயே வாழ்ந்தும் அன்பு பிறம்பாய்த்திரிந்தமையின் ஆறு நாட்களில் இறைவனே வெளிப்பட்டுத் தம் கையைப் பற்றிக் கொள்ளுமளவில் வளர்ந்துவிட்ட கண்ணப்பரைப் பெற்றிருந்தது சைவம், என்ற அவர் கூற்றின்கண் அத்தகைய அவர் ஊக்கம் புலனாதல் காணலாம்.

'சைவர்களைப் பொறுத்தமட்டில் கிரியைகளில் அதிகம் நம்பிக்கை வைக்கப் பெற்றதாகத் தெரியவில்லை'. எனவும்,

'வெறுஞ் சடங்குகட்கும் கிரியைகட்கும் முக்கியத்துவம் தருதல் கூடாது' எனவும்,

தாம் முன்னும் பின்னும் யாத்த சூத்திரங்களுக்கு உபப்ரும்ஹணமாகவே (விளக்கமாகவே) குறித்த பந்தியிலுள்ள கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்கண் தோன்றும் சிவகோசரியார் கிரியா மார்க்கமான இரண்டாம் பாகத்தில் நின்றார். கண்ணப்பர் ஞானமாகிய நான்காம் பாதத்தில் அதன் முழு மலர்ச்சியாகிய அபரா அன்பில் நின்றார். சிவகோசரியாரின் கிரியா மார்க்கம் கனிந்து யோக மார்க்கமாகி ஞான மார்க்கமாகி அதன் மலர்ச்சியாகிய அன்பு மார்க்கமாக அவர்க்கு இன்னும் கால அவகாசமுண்டு. அப்போதைய அந்நிலைமைக்குத்தக்க அவர் இறைவனைக் கனவில் மட்டும் காணக்கூடிய பேறுடையராயிருந்தார் கண்ணப்பநாயனார் திண்ணனுப் பிறக்குமுன்னமே முழுஞானச் செவ்வி நிரம்பப்பெற்ற 'பூர்விகப் பேறுடையராயிருந்தார், உலகில் வேடர் குலப் பெருந்தவத்தால் வந்து கொள்கையின் உம்பர் மேலார் என இவ் வியல்பு சேக்கிழாரால் போற்றப்பட்டுள்ளது.

அதன் பலனாக அவர்க்கு ஏலவே லபித்திருந்த அபரா அன்பின் தொடர்ச்சி இந்தப் பிறப்பில் காளத்தியப்பர் தரிசன மாத்திரத்தே விறு கொண்டெழத் தொடங்கியிருக்கின்றது. 'முன்புசெய் தவத்தி னீட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்ட' என சேக்கிழார் இதனைச் சூசித்திருப்பக் காண்கின்றோம் அவரைப் பொறுத்த அளவில் ஏலவே அன்பின் முழு விளைவு அமைந்துவிட்டிருந்தது இந்தப் பிறப்பில் அது பலன் தருமளவே நிகழவிருந்தது. ஆதலின் அவ்வியல்புக்கமைய ஆறே நாளில் இறைவன் வெளிப்பட்டருள் புரிந்தான்.

உண்மை நிலைமை இதுவாகவின் அவர் கிரியையையும் இவர் அனபியலையும் எதிர்ரெதிர் நிறுத்தி வேறுபாடு தோற்ற முயலும் முயல்வுக்கிடமெங்கே? கிரியை நம்பிக்கை வைக்கற்பாலதோர் சாதனமன்றென்றேனும் அது அநாவசியம் என்றேனும் நிலைநாட்டுதற்கு ஏதேனுமோர் இயைபு இதன்கண் உனதாதல் கூடுமோ? கூடுமெனின், படிமுறையான் மூன்னேறற்குரியராகிய மாணவருள் இரண்டாம் வகுப்பில்நின்றுளது அநுபவ நிலைக்கெதிரே நான்காம வகுப்பில் நின்றுனது அநுபவ நிலையை நிறுத்தி இவன் நிலையே நம்பிக்கை வைத்தற்குரியது அவன் நிலை நம்பிக்கை வைத்தற்குரியதன்று என்றேனும், இவன் நிலையே ஆவசியகம் அவன் நிலை ஆகாவசியம் என்றேனும் சாதிக்க முயல்வார் அடைதற்குளதாவதோர் நகைப்புக்கிடனுதல் நமக்கும் உளதாகா தொழியுமோ?

அன்றியும், சிவகோசரியார் கிரியை தழுவியும் பயன் பெற்றிலர் கண்ணப்பர் கிரியை தழுவாதே பயனுற்றுளர் என நிறுவுதற்குத்தானும் இது இடந்தரமாட்டுமோ? முற்ற முதிர்ந்து மூவா ஒழியா அவ்வயரா அன்பு நிலையிலும் கிரியை உடனின்றே அவர் அனபுப் பிரபாவத்தை விகசிக்கச் செய்தவாறும அவர் அன்புப் பயனை அநுபூதிப் பயனாக ஒன்றச்செய்து விட்டவாறும அகிலமும அறியுமன்றே. வாயால் நீர் மொண்டு தீர்த்தாபிஷேகஞ் செய்தமையும், தலையிற் சொருகி வந்த மலர் சாத்தியமையும், இறைச்சித் திருவமுதை உண் என ஊட்டியமையும் பிறவும் ஆண்டு அவர்பால உடனின்ற கிரியையே என்க. அப்போதைய அந்நிலையில அவர் அன்புக்கமைந்த கிரியை, ஞானத்துக்கமைந்த கிரியை அதாவது ஞானத்துற் கிரியை அது வாதல் காண்க. அன்றியும, சிவகோசரியார் தழுவிய கிரிகையின் பலனன்றோ இப்பக்த சிரோமணியை, அன்பொழுக்கப் பெருமையை, அன்புப்பயன் அநுபூதிப்பயனாக அவர்க்கு வாய்த்த பெருவாய்ப்பைக காளத்தியப்பர் காட்டத் தம் கண்ணெதிரே காணும பெரும்பேற்றை அவர்க்கு நல்கியுளதாதல் பிரசுத்தமாதலின், கிரியை தழுவிய சிவகோசரியார் பயன் பெற்றிலர் என்பதற்கு எட்டுணையேனும் இடமின்மையும ஓர்க.

இனி, 'நால்வரையோ சிவஞானபோதத்தையோ ஏற்காமல் ஒரு பரம்பொருளில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தே ஒருவன் சைவனாக இருத்தல் கூடும். இலலையெனில் சாக்கிய நாயனார் வரலாறுக்குப் பெரிய புராணத்தில் இடம் ஏது? (வளரும்)

## பிழை திருத்தம்

21-5-76ம் இதழில் ஷ கட்டுரையில் 3-ம் பந்தி 9-வது வரியில் சைவ மக்கள் காணத்துணிய ஆர்தாம் முற்படுவர். என்பதில் சைவ மக்கள்என்பதைச் சைவமனறெனத் திருத்திக் கொள்க.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

— புலவர் சிவங். கருணாலய பாண்டியனார் அவர்கள் —

(முன் வளர்ச்சி — )

அல்லற்பிறவி யறுப்பானேயோவென்னும் ஓகாரம் உவகையுணர்த்தித் தெரிநிலைக்கண் வந்தது. என்கோச் செங்கணானே வென்புழிப்போல.

சொல்லிச் சொல்லற் கரிபானைச் சொல்லிய பாட்டெடன மாறுக. எனவே சொல்லினுணர்தலுஞ் சொல்லைக் கழிந்து நின்றுணர்தலுமென இறைவனை யுணாதல் இருவகைப்படும் என்பது பெறப்படும். அவற்றுண் முற்பட வேண்டப்படுவது சொல்லினுணர்தலாகலின் அவ்வுணர்வின் சிறப்பீண்டுக் கூறினார்.

இங்ஙனம் அடிகள் வாதவூரர் 'சிந்தை மகிழச் சிவ புராணந்தன்னை முந்தை வினைமுழுதுமோய வுரைப்பன் யான்' என நூற்பெயரும் நூனுதலியதூஉங் கூறி இறுதியி னூற் பயனும் நூற் சிறப்புங் கூறி முடித்தலின் முதற்கட் கலி வெண்பாத் தற் சிறப்புப் பாயிரமெனப்படும்;

இப்பாட்டு முதலாகப் பாடப்படுவது சிவபுராணம்' இப்பாடற்றொகைக்கு அடிகளிட்ட பெயருமது, சிவபுராணத்தைப் பின்னுள்ள பெரியார் திருவாசகமென வழங்கினர், இப்பொழுது இம்முதற் பாயிரச் செய்யுளையே சிவபுராணமென வழங்குகின்றனர்.

வாழ்த்தும் வணக்கமும் அவையடக்கமுமாகிய தற்சிறப்புப் பாயிரவுறுப்புப் பிறவும் இச்செய்யுளின்கட் காணப்படும்

பொய்கெட்டு மெய்யானார் கூற்றுக்களைக்கொண்டு கூறுதலாலுஞ் சொல்லற்கரியானைச் சொல்லிய பாட்டென்றதனானும் அவையடக்கம் பெறப்படும்,

இப் பாட்டுத் தற் சிறப்புப் பாயிரமாதனுணர்ந்து இதனை முதற்கண் வைத்து இத்தொகை தொகுத்தார் நாரையூர் நம்பியாண்டார் நம்பிகள், தொகுப்பித்தான் சோழன் அனபாயன்;

சிவ புராண முரைப்பன் யானென எதிர்காலத்தாற் கூறிவைத்துச் சொல்லிய பாட்டென இறந்த காலத்தாற் கூறியது பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவாரை நோக்கியாகலின் வழா நிலையாமாறு காண்க.

நமச்சிவாயக் கலிவெண்பா வென்னுந் திருவாசகத் தற்சிறப்புப் பாயிரச் செய்யுட்குப் புலவர் பாண்டியனார் கண்டவுரை முற்றும். —0—

### திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திரு தருமபுரம் ஆதீனம் 26 வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜீவ சமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலிலுள்ள ஸ்ரீ ஞானாம்பிகை சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமியின் பெருவிழாவையும், ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூசை விழாவையும் சித்திரைத் திங்கள் 28ம் நாள் ஆரம்பித்து வைத்து 10 நாட்களிலும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சமயப் பயிற்சி வகுப்பும் நடத்தி வைத்தார்கள்.

## ஸ்ரீ உமாபதிதேவரின் ஒப்பற்ற சித்தாந்த ஞானம்

### தில்லையிலே குருபூசைச் சிறப்பு

[ எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு மா.. பாலசுப்பிரமணியன் ]

தில்லையம்பதியின் கீழ்பாலுள்ள கொற்றவன் குடியிலுள்ள ஸ்ரீ உமாபதி தேவரின் (சந்தானசாரியருள் நாலாவதாயுள்ள) குருபூசைவிழா சித்திரைத் திங்கள் 28 ஆம் நாள் ஹஸ்த நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ உமாபதி தேவரின் திருமடாலயத்தில் அபிஷேக-அலங்கார ஆராதனையுடன் நடைபெற்றது.

வரலாற்றுச் சுருக்கம்

தென்னிந்தியாவில் பூலோக கைலாசமாக விளங்கிவரும் தில்லையம்பதியில் (சிதம்பரத்தில்) ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னர். தில்லைவாழ் அந்தணர் சமூகத்தில் (கயிலையிலிருந்து ஸ்ரீ நடராஜப் பெருமானுடன் 3000 அந்தணர்கள் வந்தவர்கள்) தில்லை வாழந்தணர் (தீக்ஷிதர், ஒருவருக்கு நெடுநாட்களாக புத்திரசந்தானமின்றியிருந்து ஸ்ரீமந். நடராஜமூர்த்தியின் கிருபையால் ஓர் புத்திரராக ஸ்ரீ உமாபதிதேவர் அவதாரம் செய்தவராவார்.

ஸ்ரீ உமாபதிதேவர் பூர்வ ஜனமத்தின் தபோபலத்தால் 14 வயதுக்குள் சகல வேத ஆகமங்களைக் கற்றுணர்ந்து, விதிப்படி உபநயனம் தில்லை... பெற்றுக் கொண்டு, சிவபூசை செய்வதற்குரிய உரிமையையும் பெற்று ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கு பூசை செய்து கொண்டு வரும்போது, சரியை - கிரியை - யோகத்துக்குள்ள முறைகளை முன் ஜன்மத்தில் முற்றுப்பெற்ற இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் பக்குவத்தோடிருந்து கொண்டு ஸ்ரீ சாக்ஷாத் நடராஜப் பெருமானின் நிர்த்தனத்தின் மகத்துவத்திலும், ஸ்ரீ வியாக்கிர பாத ஸ்ரீபதஞ்சலி முனிவர்கள், இரண்யவர்மன் வரலாறு முதலான வகைகளில் திருவருட் சிந்தனைநாடி "கோயிற் புராணம்" என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

ஸ்ரீ உமாபதிதேவர் ஓர்நாள் முறைப்படி ஸ்ரீ சாக்ஷாத் நடராஜப் பெருமானுக்கு பூஜை செய்து முடித்துக் கொண்டு இல்லத்திற்குச் செல்ல முற்பட்டு, சோழ அரசரால் நியமம் செய்து வைத்துள்ள நவரத்தினங்களால் இழைக்கப்பெற்றுள்ள முத்துச்சிவிகையின் எழுந்தருளி நாதசுர வாத்திய ஓசைகளுடனும், சாம்பிராணி கலசம், பகல் தீவட்டி இன்னும் அனேக விருதுகளுடனும் திருதுவாக வீதிவலமாக வந்து கொண்டிருக்கும் போது, சந்தானசாரியாருள் மூன்றாவது ஆசாரியாரான ஸ்ரீ மறைஞான சம்பந்த தேவர், ஓர்தெருவின் திண்ணையில் வீற்றிருந்து, தன்னுடைய மாணாக்கர்களுக்கு பாடங்கள் போதித்துக் கொண்டிருக்கும்போது அங்ஙனம் பாடங்கேட்டுக்கொண்டிருந்த மாணவர்களில் ஒருவர், பாடம்போதித்துக் கொண்டிருக்கும் சுவாமிகளைப்பார்த்து மிகுந்த அச்சத்தோடு எழுந்து நின்று கொண்டு. சுவாமி இவ்விடத்தில் நிழலிலிருந்து கொண்டிருப்பவர்களையே சூரியனின் வெப்பம் தகிக்கிறதே, இப்படியிருக்க வைகாசி மாதத்தில் இந்தக் கடும் வெயிலில் பல்லக்கு, தீவட்டி, மேளம், மற்றும் அனேக சம்பிரதாயத்துடன் யாரோ ஒரு தீக்ஷித சுவாமிகள் (தில்லை வாழந்தணர் வருகின்றார்களே என்று சொன்ன மாத்திரத்தில் ஸ்ரீமறைஞான சம்பந்த தேவர் உடனே பார்த்துவிட்டு, "அப்பா இது பகல் குருடு" என்று சொல்ல, இந்த வாக்கு சிவிகையில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ உமாபதிதேவரின் அகத்தின் கண் திருவருள் கிருபையால் தோன்றிய மாத்திரத்தில் இது தகுதியல்லவென்று கருதி, பல்லக்கின் கண்ணிருந்து திடீர் என்று பூமியிற் குதித்து ஸ்ரீமறைஞானசம்பந்த தேவர் எழுந்தருளியிருக்கின்ற தெருத் திண்ணைக்கு அருகே சென்று மிகுந்த பயத்தோடு அட்டாங்க நமஸ்காரம் முதலியன செய்வதற்கு முற்பட்டார், ஸ்ரீ மறைஞானசம்பந்த தேவர் இதனை அறிந்து தாம் அமர்ந்திருந்த ஸ்தானத்தை விட்டு அகன்று, ஸ்ரீசாக்ஷாத் ஜெகதீசனாகிய நடராசப் பெருமானுக்கு பூசை செய்து சிவிகையின் கண்ணே அநேக சம்பிரதாயங்களோடு வரப்படும் ஸ்ரீ உமாபதிதேவர் எமக்கு நமஸ்காரம் புரிவது யாது காரணமென்று திருவருட் கொண்டு, மிகவும்விரைவாக ஓட, அருகிலிருந்த ஸ்ரீ உமாபதிதேவரும் பின் தொடர்ந்து ஓட, இருவர்களும் முன்னும் பின்னுமாக ஓடக் கடைசியாகச் செங்குந்தர் தெருவின் கண் சென்று ஒரு காலத்திலேனும் இவ்வண்ணம் நடக்காதவராதலாலும் கொடிய அக்கினி நக்ஷத்திர காலமாதலாலும் மிகவும் திகைப்புடன் ஓடினவராதலாலும், அவ்விடத்தில் இருவர்களுக்கும் சரீரம் முழுதும வேர்வையுடன் மிகவும் களைப்படைந்து விட்டார்கள், ஸ்ரீ மறைஞான சம்பந்ததேவா தெருவில்பாவு தோவைந்து கொண்டிருந்த செங்குந்தர்களைப் பார்த்து அப்பா மிகவும் களைப்பாக இருக்கிறது என்று திருவாக்களித்தார். பாவு தோவைந்து கொண்டிருந்த செங்குந்தர்களில் ஒருவர், சுவாமி பாவு தோவைத்துள்ள கஞ்சி(கூழ்) இருக்கிறது கொடுக்கட்டுமா? என்று கேட்டார். வரும்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஆசுச மில்லே அருகிய மத்தருக்(கு)
ஆசுச மில்லே அரனே அர்ச் சிப்பவர்க்(கு)
ஆசுச மில்லேயாம் அங்கிவளர்ப் போருக்(கு)
ஆசுச மில்லே அருமறை ஞானிக்கே.

No impurity blemishes those who perform their prescribed duties or worship God or rear the sacred fire. Neither does it attach itself to Siva Gnanies learned in the Vedas.

Hindu Organ

FRIDAY, MAY 28, 1976

## Concessions for Cultural Causes

In the context of the praiseworthy policy of the Government that the boon of electricity should be enjoyed by the entire country with accent on the rural areas, we wish to suggest that the Authorities must provide for certain financ al assistance in the form of concessions by enabling places of religious worship avail themselves of the benefit of *outer* illumination. The spiritual sphere is always inwardly illumined, the radiance of the Almighty reaching the devotees who can see it. The outward appearance of Temples, Viharas, Churches, Mosques and other spiritual centres depend on the light that is produced by electricity as illumination by torches will not be equal to the requirements of vast concourses of worshippers.

Light is the opposite of darkness and is the natural agent that stimulates the sense of sight leading all beings to see what is around. A Temple needs this modern device of electrical installation as several hundreds of devotees daily congregate there to see 'the Light'. But the cost of such facility is prohibitive. Hence the need for concessions to places of worship.

## Spiritual Talks in Schools

Occasionally a few leading Colleges in the North take the opportunity of the presence of eminent Saiva literators in the Island to provide for talks for the benefit of their students. This practice may be broadened and better based as part of the curriculum of studies as such a step would lead to the development of the thinking faculty of the youth in the proper perspective.

All the world over it has now become necessary that the energetic enthusiasm of the youth should be properly directed to good purpose. This end can be achieved best only by making available at schools practical training in religion and ethics by means of regular lessons and practice of tenets according to religious texts.

The attention that is now being paid to the development of religious practice in educational establishments is only confined to the prayers in the morning and the afternoon supplemented by the offering of Special Poojahs on the occasion of days of religious significance.

The broad-basing of the present practice, therefore, becomes absolutely necessary. One significant step would be to provide for weekly talks on 'Religion' by recognised teachers of Spiritual Truths. In effect this arrangement would tend to enable the students anxiously look forward to the particular hour to hear salient principles of spiritualism from those who by scholarship and devotion are eminently suited to give talks on such subjects.

There will also be a continuity in the trend of the talks that would be helpful to the students to assimilate the ideas.

Here is suggestion for the school Authorities to work upon in collaboration with the assistance of Religions Organizations.

## Seventeen Additional Seats!

From 151 to 168 the increase in the number of seats in the National State Assembly may be a necessary step. But has this enlargement paved a way for the voice of the minorities to be strengthened?

The Northern and the Eastern Provinces have one solitary seat for them out of the seven teen new electorates: Area-wise the proportion seems to be perplexing!

The Hill country electora'es in the new de marcation can but help only one Tamil seat being assured. Here again the expectations seem to have been belied.

Some electorates have been re-named perhaps to suit the wishes of the electorates. This however cannot go to solve any political problem.

The creation of an additional electorate in the North — namely Mullaitivu however remains as the solitary gain in the Tamil speaking areas.

In the multi-member pattern no significant change has been effected.

In the gross estimate as far as the Tamil speaking people are concerned the only comment at present seems to be that their relative position in the N. S. A. can be gauged only after the next election.

## New Students at the Jaffna Campus

About 120 new students were admitted to the Faculty of Humanities, Jaffna Campus. They were welcomed at the Thirunelvely premises on the second ultimo by Prof. K. Kailasapathy, the President of the Jaffna Campus, Prof. K. Kailasanathakkurukkal, the acting Dean of the Faculty of Humanities and members of the staff. These students are given an intensive course in English before the sessions begin by the end of May.

*Letter to the Editor.*

## Remembering Sir P. Ramanathan

Sir,

The 16th of April '76 the memorable 125th Anniversary or Sir Ponnampalam Ramanathan's birth was celebrated fervently in different parts of Jaffna.

The third day after the celebrations, I paid a courtesy call to the grand Old Saivaite Mr. S. Sivasubramaniam, in his Jaffna residence, with another religionist of Jaffna.

Our host, treated us to a recapitulation of several memoirs and took us back to the early twentieth century, the days of the Saiva Savants, Sri Arumuga Navalar, Sir P. R, Sri Gnanapiragasar and others of the same calibre.

He sat up erect with youthful energy and said that they were Saiva giants who not only lived in that Saiva tradition but salvaged Saivaism out of the clutches into which the Christian missionary work was pushing it.

They were fearless preachers and writers. They stood fearlessly on platforms and sat long to write for the propagation of the sweet language Tamil and the great Saiva Culture, Agamas and Puranas These sages dedicated their lives to the cause of Tamil and Saivaism.

Their souls parted their bodies leaving behind in this world an inspiration to serve these inseparable twins — Tamil and Saivaism.

It will be ungrateful of us, if they are not remembered now for the future generations to follow.

The old Saivaite was very glad that 1976 had celebrated Sir P. R's 125th anniversary in such a grand scale in the very place the great educationist had established to teach higher studies.

On the subject of higher studies, he recalled Sir P. R's untiring efforts to make religion a compulsory subject in the school curriculum. The old sage is for making religion a compulsory subject in the curriculum of studies in universities.

He also suggested that the year 1976 from 16-4-76 to 16-4-77 should be made the Ramanathan year and celebrated by different organizations in different ways. The educational institutions he established should celebrate the event once a month throughout the year.

The veteran Attorney-at-Law himself is a great lover of Tamil and Saivaism and comes in the same category as Sri M. Thiruvilangam the great Saiva Siddhanta writer.

I wish the Saiva Periyar (பெரியார்) long life and dedication to Tamil and Saivaism.

Yours etc
Dr. N. Kanagaratnam

91, Arasady Road,
Jaffna.

10-5-76.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-1-1973 with Mr. Sanmugam Mahadeva of 65 Main Street Jaffna on Friday 18-6-1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

"Raja giri"
643, K. K. S. Road
Jaffna

V. S. Cuttipillai,
Auctioneer.
(2 28 & 4)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday May 28, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org